ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2253/41 - 2021 නොවැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2021.11.12

*2253/41 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. : 11/2021*

**மதுபானம் மீதான மதுவரித் தீர்வை**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் -

(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்றுள்ள ஏதேனும் உற்பத்திச்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் விசேட சாராயத்தின் மீது அனுமதிக்கப்பட்ட மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா நான்காயிரத்து நூற்றியெண்பது (ரூபா 4,180.00) என்ற வீதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும் ;

(2) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்றுள்ள ஏதேனும் உற்பத்திச்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாசஸ்), பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா நான்காயிரத்து நானூற்றறுபது (ரூபா 4,460.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும் ;

(3) இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற "வெளிநாட்டு" மதுபானம் மீது அனுமதிக்கப்பட்ட மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா நான்காயிரத்து ஐந்நூற்றெழுபது (ரூபா 4,570.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும் ;

1A - PG 5601 — 510 (2021/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(4) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து வீதத்திற்குக் (5%) குறைவான நிகர செறிமத்தைக் கொண்ட தானிய வகை மதுசாரம் (Malt Liquor) மீது, அவ்வாறு விநியோகிக்கப்படும்/உற்பத்தி செய்யப்படும் மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா மூவாயிரத்து முந்நூறு (ரூபா 3,300.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும் ;

(5) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து வீதம் (5%) மற்றும் அதற்கு மேற்பட்ட நிகர செறிமத்தைக் கொண்ட தானிய வகை மதுசாரம் (Malt Liquor) மீது, அவ்வாறு விநியோகிக்கப்படும்/உற்பத்தி செய்யப்படும் மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா மூவாயிரத்து நானூற்றைம்பது (ரூபா 3,450.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும் ;

(6) பனைமரத்தின் இயற்கையான உற்பத்திப் பொருட்கள் அல்லது ஏதேனும் தாவரத்திலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர்ந்த செயன்முறை மூலம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் (கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த) மீது அனுமதிக்கப்பட்ட மதுசார லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா மூவாயிரத்து முந்நூறு (ரூபா 3,300.00) என்ற விகிதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும்;

(7) மேலே (1) முதல் (6) வரை குறிப்பிடப்பட்டுள்ள தீர்வையானது, மதுபானங்கள் ஏற்றுமதி செய்யப்படும் போது, தொகையளவு எத்தகையதாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ;

(8) மேலே (4) மற்றும் (5) ஆம் இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வையானது, அனுமதிபெற்ற வடிசாலை ஒன்றிலிருந்து, இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இராஜதந்திர தூதரகத்தின் பாவனைக்காக விநியோகிக்கப்பட்ட எத்தகைய அளவிலான மதுபானத்திற்காகவும் அதற்கான கொடுப்பனவு அத்தூதரகத்தின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து செலுத்தப்படுமிடத்து, மேற்குறித்த தீர்வை அறவிடப்படலாகாது எனவும்; மற்றும்

(9) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 2152/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 07/2019 ஆம் இலக்க அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, நவெம்பர் 12.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.